## <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS – 87/2018</u>

நாள் – 09.03.2026

DW3 – சண்முகம்

த/பெ – மாரப்பகவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of March 2026)**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. வாதி கருப்பகவுண்டர் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். 3ம் பிரதிவாதி துளசிமணி எனது மனைவி. 2ம் பிரதிவாதி ராசன் (எ) பொன்னுசாமி எனது மனைவியின் சகோதரர். 1ம் வாதி கருப்பகவுண்டர் மற்றும் 5ம் பிரதிவாதி ராமசாமி ஆகிய இருவரும் எனது மனைவியின் உடன்பிறந்த சகோதரர்கள். 1, 4 பிரதிவாதிகள் எனது மனைவியின் உடன்பிறந்த சகோதரிகள். எனது மாமனார் அம்மாசைகவுண்டருக்கு வேட்டுவபாளையம் கிராமம், எ.குரும்பபாளையம் பூர்வீகம் என்றால் சரிதான். எனது மாமனார் அம்மாசைகவுண்டர் 106 வயதில் இறந்துபோய்விட்டார். அவர் ஆவணங்களில் வழக்கமாக கையொப்பம்தான் செய்து வந்தார் என்றால் முதலில் கையொப்பம் செய்து வந்தார், அவரது கடைசி காலத்தில் அவரால் கையெழுத்து போட முடியவில்லை கைநடுக்கம் வந்துவிட்டது. எனக்கும் எனது மனைவி 3ம் பிரதிவாதிக்கும் 1975ம் ஆண்டில் திருமணம் நடந்தது. எங்களது திருமணத்திற்கு பிறகு அம்மாசைக்கவுண்டர் சத்தியமங்கலம், தொட்டம்பாளையத்திற்கு சென்று விட்டார். 1ம் பிரதிவாதியை அவிநாசி தாலுக்கா கந்தம்பாளையத்திற்கு தான் திருமணம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் எனது மனைவி 3ம் பிரதிவாதி சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். அவருக்கும் சேர்த்துதான் 1ம் பிரதிவாதி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியும் எங்களோடு சேர்ந்துதான் வழக்கு நடத்தி வருகிறார் என்றால் சரிதான். 2012ம் ஆண்டில் அம்மாசைக்கவுண்டர் தொட்டம்பாளையத்தில் உள்ள சொத்துக்களை பொறுத்து எழுதி வைத்ததாக சொல்லப்படும் ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் போடவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள 19.07.2013 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதுவதற்கு அந்த சொத்தின் முன் அசல் ஆவணத்தை கொண்டு வந்தாரா என்றால் இல்லை, அசல் ஆவணம் தொலைந்து போய்விட்டதாக சொன்னார். அந்த ஆவணம் எப்போது தொலைந்து போனது என்று என்னிடம் சொன்னாரா என்றால் ஜெராக்ஸ் எடுக்க சென்றபோது தொலைந்து போய்விட்டதாக சொன்னார்.

3. அவிநாசி காவல்நிலையத்திற்கு எதிராகத்தான் நான் நடத்தி வரும் ஹோட்டல் வீனஸ் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த இடத்தில்தான் அவிநாசி பேருந்து நிலையம் இருந்தது என்றால் சரிதான். அசல் ஆவணம் தொலைந்துபோனது சம்பந்தமாக காவல்நிலையத்தில் அவர் புகார் கொடுத்திருந்தார். அந்த புகாரில் என்னென்ன ஆவணங்கள் காணாமல் போனதாக குறிப்பிட்டு கொடுத்திருந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு நானும் எனது மாமனாருடன் சென்றிருந்தேன். தான செட்டில்மெண்ட் பத்திரம் தயார் செய்ய எத்தனை மணிக்கு மாதிரி பத்திரம் தயார் செய்தார்கள் என்றால் 10, 11 மணி வாக்கில் தயார் செய்தார்கள். அந்த ஆவணத்தை எத்தனை மணி நேரத்தில் தயார் செய்து முடித்தார்கள் என்றால் 2, 3 மணி

நேரத்தில் தயார் செய்தார்கள். அன்றைய தினம் இந்த ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் மட்டும்தான் அம்மாசைகவுண்டர் எழுதி கொடுத்தார். அப்போது அம்மாசைக்கவுண்டர் வரைபடம் ஏதேனும் கொண்டு வந்தாரா என்றால் வரைபடம் கொண்டு வந்திருந்தார். அந்த வரைபடத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் சர்வேயர் மூலம் வழக்கறிஞர்கள் தான் தயார் செய்தார்கள். அந்த சர்வேயரை நாங்கள்தான் பார்த்தோம்.

4. 1ம் வாதி கருப்பகவுண்டர், 4ம் பிரதிவாதி மாராத்தாள், 5ம் பிரதிவாதி ராமசாமி ஆகியோருடன் எங்களுக்கு சுமுகமான உறவு இல்லை என்றால் மாராத்தாளுடன் சுமுகமான உறவு இருந்து வருகிறது. ராமசாமியுடன் தற்போது எங்களுக்கு சுமுகமான உறவு இல்லை. அம்மாசைக்கவுண்டருக்கு உறவினர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். ஆவணம் எழுத சென்றபோது அந்த உறவினர்கள் யாரும் அம்மாசைகவுண்டருடன் வரவில்லை என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணத்தை தயார் செய்வதற்கு முத்திரைத்தாள்களை எப்போது வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த முத்திரைத்தாளை 2ம் பிரதிவாதி தான் வாங்கி வந்தார். செட்டில்மெண்ட் ஆவணம் எழுதும்போது 2ம் பிரதிவாதியும் உடன் இருந்தார். அம்மாசைக்கவுண்டருக்கு ஆதார் அடையாள அட்டை , வாக்காளர் அடையாள அட்டை இருந்தது என்றால் வங்கி கணக்கு புத்தகம் இருந்தது மட்டும்தான் எனக்கு தெரியும். செட்டில்மெண்ட் ஆவணத்தை பதிவிற்கு தாக்கல் செய்வதற்கு வாக்காளர் அடையாள அட்டை இணைத்து தாக்கல் செய்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ 6 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்னென்ன விவரங்கள் உள்ளது என்ற

விவரம் எனக்கு தெரியும். அந்த செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்த தேதியிலேயே பதிவு செய்யப்பட்டு விட்டது. அன்றைய தினம் அந்த பி.வா.சா.ஆ 6 ஆவணம் மட்டும்தான் பதிவு செய்யப்பட்டது.

5. என்னிடம் காட்டப்படும் 19.07.2013 தேதியிட்ட உயில் சாசன ரத்து பத்திரத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதன் பேரில் **19.07.2013 தேதியிட்ட பதிவு உயில் சாசன ரத்து பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்பட்டது. வா.சா.ஆ.16 ஆவணத்திலும், பி.வா.சா.ஆ.6 ஆவணத்திலும் எனது அண்ணன் ராமசாமி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களிலும் அம்மாசைக்கவுண்டரின் உறவினர்கள் யாரும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.6 அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தில் பக்கம் 5ல் கையால் எழுதப்பட்டுள்ள விவரங்களை வழக்கறிஞர்தான் எழுதினார். அந்த விவரங்களை அம்மாசைக்கவுண்டர் சொல்லிதான் வழக்கறிஞர் எழுதினார். இந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1ம் வாதி மற்றும் 4, 5 பிரதிவாதிகளுக்கு சொத்துக்கள் ஒதுக்கப்படவில்லை என்பது குறித்து காரணம் எதுவும் குறிப்பிட்டு அதில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் எழுதும்போது 1ம் வாதி, 5ம் பிரதிவாதி ஆகியோருடன் எனக்கு போக்குவரத்து எதுவும் இல்லாமல் இருந்தேன். அதேபோல் 1ம் பிரதிவாதியுடன் 1ம் வாதி, 5ம் பிரதிவாதிகளுக்கு போக்குவரத்து இல்லை என்றால் சரிதான். 1ம் வாதியின் இறப்பிற்கும் நான் செல்லவில்லை என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ 6 செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் வா.சா.ஆ.16 உயில் சாசன ரத்து பத்திரம் ஆகியவைகளில் அம்மாசைக்கவுண்டரின்

கைப்பேசி எண்ணாக குறிப்பிடப்பட்டுள்ள 997657636 என்ற எண்ணானது யாருடையது என்றால் 2ம் பிரதிவாதி ராசன் என்கிற பொன்னுசாமி என்பவருடையது. ஆவணத்திற்குரிய முத்திரைத்தாள்களை 2ம் பிரதிவாதிதான் போய் வாங்கி வந்தார். அம்மாசைக்கவுண்டர் இறக்கும்வரை அவிநாசியில் உள்ள எனது வீட்டிற்கு வந்து இருந்தாரா என்றால் எங்கள் வீட்டிற்கு வந்து இருப்பார், ஒரு வாரம் கழித்து தொட்டம்பாளையத்திற்கு 1ம் பிரதிவாதி ராமாத்தாள் வீட்டிற்கு சென்றுவிடுவார். அம்மாசைக்கவுண்டர் அவர் இறுதி காலம் வரையில் தொட்டம்பாளையத்தில்தான் வசித்து வந்தார் என்றும், ஆனால் நான் வழக்கிற்காக அவிநாசியில் வந்து எனது வீட்டில் இருந்து விட்டு சென்றதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. வேட்டுவபாளையத்தில் உள்ள சொத்துக்களை பொறுத்து அம்மாசைக்கவுண்டர் 05.09.2001-ம் தேதியில் உயில் சாசனத்தை அவருடைய மூன்று மகன்களுக்கு எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த உயில் சாசனத்தை ரத்து செய்த போதும், செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியபோதும் நானும், 1ம் பிரதிவாதி ராமாத்தாள், 2ம் பிரதிவாதி பொன்னுசாமி, 3ம் பிரதிவாதி துளசிமணி ஆகிய எல்லாரும் சென்றிருந்தோம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.16, பி.வா.சா.ஆ.6 ஆவணங்களை எழுதியபோது அம்மாசைக்கவுண்டருக்கு சுமார் 102 வயது இருந்திருக்கும் என்றால் இருக்கலாம். அம்மாசைக்கவுண்டர் வயதான நிலையில் இருந்ததை பயன்படுத்தி அவரை அழைத்து சென்று வா.சா.ஆ.16 மற்றும் பி.வா.சா.ஆ.6 ஆவணங்களை ஏற்படுத்திக்கொண்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அம்மாசைக்கவுண்டர் அப்போது அந்த ஆவணங்களை எழுதிக்கொடுக்கும்

நிலையில் அவர் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல ஆவணங்கள் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சொத்துக்களை அபகரிக்கவேண்டிதான் மேற்படி ஆவணங்களை பொய்யாக ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல.

8. வேட்டுவபாளையம், தொட்டம்பாளையம் கிராமங்களில் உள்ள சொத்துக்களை தவிர அம்மாசைக்கவுண்டருக்கு வேறு சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு சட்டப்படி பாகம் உள்ளது என்றும், அதனால் வாதிகள் தாவாவில் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.10 17:42:44 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**